**செய்தி வெளியீடு எண்: 96** **நாள்: 12.02.2013**

<u>பத்திரிக்கை செய்தி</u>

# ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்வதற்கு தமிழக அரசின் ரூ.20000/– நிதி உதவி வழங்கும் திட்டம்

தமிழக அரசின் நிதியுதவி திட்டத்தின்கீழ் ஜெருசலேம் புனிதப் பயணம் சென்றுவர தமிழகத்தைச் சேர்ந்த கிறித்தவ பெருமக்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.20000/– நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதற்கான பயண முகவர்கள் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவரங்கள் தெரிவிக்கப்பட்டு, புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பயண முகவர்களின் பயண நிரல்படி எகிப்து, இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளை உள்ளடக்கிய 10 நாள் ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கு ரூ.73000/– மற்றும் இஸ்ரேல், ஜோர்டன் நாடுகளை உள்ளடக்கிய 7/8 நாட்கள் ஜெருசலேம் புனிதப்பயணத்திற்கு ரூ.66000/– பயணத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு நிதியுதவி ரூ.20000/–ஐ பயணமுகவர்களுக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் நேரடியாக செலுத்தப்படவுள்ளதால் பயனாளிகள் மீதமுள்ள தொகையான ரூ.53000/– (10 நாட்கள்) அல்லது ரூ.46000/– (7/8 நாட்கள்) மட்டும் பயண முகவர்களுக்கு செலுத்தினால் போதுமானது.

அரசு திட்டத்தின் கீழ் இப்புனிதப் பயணம் மேற்கொள்ள விருப்பமிருந்து இதுவரை விண்ணப்பிக்காதவர்களுக்கு மேலும் வாய்ப்பு அளிக்கும்விதமாக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் மேலும் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே, ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொள்ள விருப்பமுள்ள கிறித்தவ பெருமக்கள் மேலும் தாமதமின்றி அதற்கான விண்ணப்பத்தினை பின்வரும் விலாசத்திற்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்விண்ணப்பம் கிடைக்கும் இடம்

1. மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்கள்.
2. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சென்னை–2
3. www.tn.gov.in/bcmbcmw/welfschemes_minorities என்ற இணையதளத்திலிருந்து படியிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

**"ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான விண்ணப்பம்"** என்று குறிப்பிட்டு
**மேலாண்மை இயக்குநர்,**
**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,**
**807, (5வது தளம்), அண்ணா சாலை, சென்னை–600 002 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**